**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், சென்னை–6.**
**ந.க. எண். 053299/எம்/இ2/2018, நாள். 4.10.2018**

**பொருள்:–** பள்ளிக் கல்வி – சிறுசேமிப்பு –2018–19 அம் ஆண்டின் உலக சிக்கன நாள் விழா –30.10.2018அன்று கொண்டாடுதல்–பள்ளி மாணவர்களிடையே சிக்கனம் மற்றும் சேமிப்பினை வலியுறுத்தி போட்டிகள் நடத்துதல் –சார்பு.

**பார்வை:–** 1. அரசாணை (நிலை) எண்.764 நிதி (சிறுசேமிப்பு)த் துறை, நாள். 24.09.2018
2. ஆணையர் (பொறுப்பு), சிறுசேமிப்புத் துறை, அவர்களின் நே.மு.கடிதம் எண். சி1/2273/2018–1, நாள். 26.09.2018

--------

பார்வை 2–ல் காணும் கடிதத்தில், 'உலக சிக்கன நாள்' ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 30–ம் தேதி நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் பள்ளி மாணவ / மாணவர்களிடையே சிக்கனம் மற்றும் சேமிக்கும் பண்பினை வளர்க்கும் வகையில் கட்டுரைப்போட்டி, நாடகப்போட்டி, நடனப்போட்டி, பேச்சுப்போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன.

இப்போட்டிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு, மாவட்ட அளவில் வெற்றி பெறும் மூன்று மாணவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் 'உலக சிக்கன நாள்' (30.10.2018) அன்று பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களின் பெயர்ப் பட்டியலை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் பட்டியலை சென்னை மாநகராட்சி உதவி இயக்குநர் (சிறுசேமிப்பு)–க்கும் அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் மாநில அளவிலான போட்டிகள் சென்னையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறுசேமிப்புத் துறையில் மாவட்டங்களில் பணியாற்றும் சிறுசேமிப்பு உதவி இயக்குநர்கள் உலக சிக்கன நாள் நிகழ்ச்சிகளின் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே உலக சிக்கன நாள் கலை நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பாளர்களோடு கலந்தாலோசித்து மாணவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி அதிக எண்ணிக்கையிலான மாணவ/ மாணவிகளை போட்டிகளில் பங்கேற்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் / மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு
பார்வை (2)ல் காணும் கடிதத்தின் நகல்

**பள்ளிக்கல்வி இயக்குநர்**

**பெறுநர்**
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் / மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

நகல்
ஆணையர் பொறுப்பு,
சிறுசேமிப்புத்துறை,
எண்.735, அண்ணா சாலை, சென்னை–02 – அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்து அனுப்பலாகிறது.

டாக்டர். பு.உமாநாத்., இ.ஆ.ப.,
ஆணையர், (பொறுப்பு).
சிறுசேமிப்புத் துறை.

எண்.735, அண்ணா சாலை,
சென்னை 600 002.
நேரடி : 044 - 28518737
நிகரி : 044 - 28527507

நே.மு.கடித எண்: சி1/2273/2018-1 நாள் : 26..09..2018

அன்பார்ந்த திரு இராமேஸ்வரமுருகன்,

பொருள்: சிறுசேமிப்பு - 2018-19 ஆம் ஆண்டின் உலக சிக்கன நாள் விழா- 30.10.2018 அன்று கொண்டாடுதல் - பள்ளி மாணவ / மாணவியர்களிடையே சிக்கனம் மற்றும் சேமிப்பினை வலியுறுத்தி போட்டிகள் நடத்துதல் - குறித்து.

பார்வை: அரசாணை நிலை எண் 764, நிதி (சிறுசேமிப்பு)த் துறை, நாள் 24.09.2018.

*******

பார்வையில் காணும் அரசாணையின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. "**உலக சிக்கன நாள் விழா**", ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 30 ஆம் தேதி இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு "உலக சிக்கன நாள்" விழாவை முன்னிட்டு பள்ளி மாணவ / மாணவியர்களிடையே "சிக்கனம் மற்றும் சேமிக்கும் பண்பினை" வளர்த்திடும் பொருட்டு, அதன் ஒரு நிகழ்வாக, கீழ்காணும் கலை நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது என்பதை தாங்கள் அறிவீர்கள், அவை

(1) கட்டுரைப்போட்டி (2) நாடகப்போட்டி (3) நடனப்போட்டி (4) பேச்சுப்போட்டி

2. எனவே, பார்வையில் காணும் அரசாணையின்படி, நடப்பு நிதியாண்டாக 2018-19, "உலக சிக்கன நாளை" முன்னிட்டு பள்ளி மாணவ / மாணவியர்களிடையே மேற்காணும் போட்டிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு, மாவட்ட அளவில் வெற்றி பெற்றவர்களுக்கு, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களாலும், மாநில அளவில் வெற்றி பெற்றவர்களுக்கு, சென்னையில் நடைபெறும், உலக சிக்கன நாள் விழாவில் பரிசுகள் வழங்கப்படும். நடப்பு நிதியாண்டில், மேற்காணும் கலை நிகழ்ச்சிகள் அனைத்து மாவட்டங்களில் நடத்திட முதன்மைக் கல்வி அலுவலர் / மாவட்டக் கல்வி அலுவலர் மூலம் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுரை வழங்கிடவும், நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற உரிய தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

3. சென்னையில் நடைபெறும் மாநில அளவிலான உலக சிக்கன நாள் விழாவில், சிக்கனம் மற்றும் சேமிப்பினை வலியுறுத்தி கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்தி தந்திடவும், முதன்மை கல்வி அலுவலர் / மாவட்ட கல்வி அலுவலர் வாயிலாக நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட அளவில் முதல் மூன்று மாணவ / மாணவியர்களுக்கு, உலக சிக்கன நாள் (30.10.2018) விழா அன்று பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வழங்கப்படும் எனவும், மாவட்டங்களில், பள்ளி மாணவ / மாணவியர்களிடையே போட்டி கலை நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்கள் பட்டியல் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், சென்னையில் மேற்கண்ட நிகழ்ச்சியில் வெற்றி பெற்றவர்கள் பட்டியல், சென்னை மாநகராட்சி உதவி இயக்குநர் (சிறுசேமிப்பு) அவர்களுக்கு, அனுப்பி வைக்குமாறு, முதன்மை கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்கிடவும், நடவடிக்கை மேற்கொள்ளவும் கேட்டுக்கொள்கிறேன்.

த.செ.பி.பா.

. . . . . . 2/-

4. உலக சிக்கன நாள் 30.10.2018, நிகழ்ச்சி தொடர்பாக மாவட்டங்களில் பணியாற்றும், சிறுசேமிப்பு உதவி இயக்குநர்கள், முதன்மை கல்வி அலுவலரை நேரில் தொடர்பு கொண்டு, இப்பணியை ஒருங்கிணைப்பார்கள் என்றும், அவர்களுக்கு தக்க ஒத்துழைப்பினை நல்கிட, தகுந்த அறிவுரைகள் வழங்குமாறும் தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

நல்வாழ்த்துக்களுடன்,

தங்கள் உண்மையுள்ள,

(பு. உமாநாத்) 29/9

பெறுநர்

முனைவர் வி.சி.இராமேஸ்வரமுருகன்,
பள்ளிக் கல்வி இயக்குநர்,
கல்லூரி சாலை,
சென்னை - 600006